# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**A041 இலக்கிய வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கடைச்சங்க நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. தொல்காப்பியத்தின் ஆசிரியர் யார்?
3. ஆற்றுப்படை நூல்கள் யாவை?
4. திருக்குறளின் அதிகாரங்கள் மொத்தம் எத்தனை?
5. இரட்டைக் காப்பியங்கள் எவை?
6. தேவாரம் பாடியோர் யாவர்?
7. 'சூடிக் கொடுத்த சுடர்கொடியாள்' என்றழைக்கப்படுபவர் யார்?
8. சீறாப்புராணம் எழுதியவர் யார்?
9. நளவெண்பாவின் ஆசிரியர் யார்?
10. குறவஞ்சி இலக்கியத்தில் சிறப்பாகக் கருதப்படும் நூல் எது?
11. உரைநடை வளர்த்த தமிழறிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.
12. பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
13. பாரதியாரின் நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
14. நாடக ஆசிரியர்கள் இருவரை எழுதுக.
15. எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்தவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. தொல்காப்பியத்தின் சிறப்புகளை எழுதுக.
2. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் யாவை?
3. முதல் மூன்று ஆழ்வார்களைப் பற்றி எழுதுக.
4. திருக்குறளின் பெருமைகள் சிலவற்றைச் சுட்டி உரைக்க.
5. திருத்தொண்டர் புராணம் என அழைக்கப்படுவதன் காரணத்தை எழுதுக.
6. சிற்றிலக்கியங்களில் ஒன்றைப் பற்றி எழுதுக.
7. பாரதியார் குறித்து எழுதுக.
8. தமிழ் நாடகம் பற்றிக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) ஆற்றுப்படை நூல்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) எட்டுத் தொகை நூல்களில் அக நூல்களைப் பற்றி விவரிக்க.

2. (அ) தமிழ் இலக்கண நூல்கள் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) ஐம்பெரும் காப்பியங்கள் குறித்து எழுதுக.

3. (அ) சைவ நூல்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் புதுக்கவிதைகள் குறித்து தொகுத்துரைக்க.

***